(பிற்பகல் 4-40)

14. தந்தை பெரியார் போக்குவரத்து நிறுவனத்துக்கு 35 இலட்சம் ரூபாய் பங்கு மூலதனம் அளிக்கவும், வனத் தோட்ட நிறுவனத்துக்கு 15 இலட்சம் ரூபாய் பங்கு மூலதனம் வழங்கவும், சர்க்கரை ஆலைகள் நிறுவனத்துக்கு 5 இலட்சம் ரூபாய் பங்கு மூலதனம் தருவதற்கும், தமிழ் நாடு உப்பள நிறுவனத்திற்கு 5 இலட்சம் ரூபாய் பங்கு மூலதனம் அளிக்கவும் துணை மதிப்பீடுகளில் வகை செய்துள்ளோம். தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்துக்கு முன்னர் கடன் தொகையாக வழங்கப்பட்ட 30 இலட்சம் ரூபாய் அந்நிறுவனத்தின் பங்கு மூலதனமாக மாற்றப் பட்டுள்ளது. அதற்கான அடையாள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது சென்னையிலும் ஆளியாறு நகரிலும் உள்ள பொதுப்பணித் துறை தொழிற்கூடங்களை ஒரு புதிய நிறுவன அமைப்பாக மாற்றுவதற்கு அடையாள நிதி ஒதுக்கமும் கோரப்பட்டுள்ளது.

15. பேருந்துகள் வாங்கும்பொருட்டு பல்லவன் போக்குவரத்து நிறுவனத்துக்கு மத்திய அரசு கடனாக அளித்துள்ள மூன்று கோடி ரூபாயை வழங்குவதற்கும் நாம் நிதி ஒதுக்கம் செய்துள்ளோம். இதுவன்றி பல்வேறு போக்குவரத்து நிறுவனங்களுக்கு கடன்களும், வழிவகை முன் பணங்களுமாக மொத்தம் 3.93 கோடி ரூபாய் அளிக்கவும் மேலும் வகை செய்யப்பட்டுள்ளது.

16. தமிழ்நாடு கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழிவகை முன்பணமாக வழங்கியதற்கும், வீட்டு வசதி வாரியத்துக்கு வழிவகை முன் பணமாக 34 இலட்சம் ரூபாய் வழங்கியதற்கும் 56 ஆவது மானியத்தின் மூலம் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

17. துணை மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள முக்கியமான ஒரு சில செலவினங்களை இதுவரை நான் எடுத்துக் கூறியுள்ளேன். மன்றத்தில் அளிக்கப்பட்டுள்ள விரிவான அறிக்கையில் இவை பற்றிய விளக்கங்களையும் பிற செலவினங்கள் பற்றிய விவரங்களையும் காணலாம் என்று கூறி, 1974–75ஆம் ஆண்டிற்கான இந்த இறுதித் துணை மதிப் பீடுகளை ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகிறேன்.

4. அரசின் தீர்மானம் அலுவல் வரிசையில் மாறுதல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவரவர்களே,

"மேலவை விதிகளின் 21 (3)வது விதியின் கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் அரசின் சட்ட முன்வடிவுகளில் மூன்றுவது இனமாக உள்ள தமிழ்நாடு 1975–ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1975)–ஐ முதலில் எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை:

1975 மார்ச் 22] [மேலவைத் தலைவர்]

"மேலவை விதிகளின் 21 (3) வது விதியின் கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் அரசின் சட்ட முன்வடிவுகளில் மூன்றுவது இனமாக உள்ள தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 10/1975)ஐ முதலில் எடுத்துக்கொள்ள வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

5. அரசின் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1975).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே,

'சட்ட மன்றப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவு @ (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1975) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்" என்று முன்மொழிகின்றேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவைமுன் உள்ள பிரச்சினை :

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1975) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பரிந்துரை எதுமில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; தலைவரவர்களே,

"சட்ட மன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/1975) திருப்பியனுப் பப்பட வேண்டும்"

என்று முன்மொழிகின்றேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

@ 52-54 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.